**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.NO. 159/2021**

**Deposition of Witness for P.W.4**

| | | |
|---|---|---|
| NAME | - | விநாயகமூர்த்தி |
| FATHER'S NAME | - | வேணுகோபால் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.11.2023.

**A1 toA3 . A5 and A7 Present A6 Produced. A4 ABSENT. PETITION U/S.317 CRPC FILED AND ALLOWED.**

நான் ஒடுகத்தூரில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடைதுதான். இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடைய அப்பாவினுடையது. பார்வை மகஜரில் முதலாவது உள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். அந்ம கையொப்பத்தை நான் 03.05.2015 தேதியில் என்னுடைய நிலத்தில் வைத்து போட்டேன். அந்த கையொப்பத்தை எங்களுடையை நிலத்தில் உள்ள கிணற்றில் ஒரு சடலம் இருந்ததற்காக போட்டேன். எங்கள் நிலத்தில் உள்ள கிணற்றை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைப்படம் தான்

போலீசார் எங்கள் நிலத்தில் பார்வையிட்டு வரைந்து படமாகும். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் வீட்டிற்கு காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால் உள்ளது. காம்பவுண்டுக்குள் கொசு வலை பேக்டரி உள்ளது என்றால் சரிதான். கொசு வலை பேக்டரிக்கு பின்னால் எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கு பின்னால் கிணறு உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு காம்பவுண்ட் வழியாக உள்ளே வரும் நபர்களை பேக்டிரியில் இருந்தும் பார்க்கலாம் வீட்டில் இருந்தும் பார்க்கலாம் என்றால் சரிதான். கிணற்றுக்கு பக்கத்தில் ஆறு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நாங்கள் பெங்களூருவில் இருந்தோம் என்றால் சரிதான். அந்த கிணற்றுக்கு செல்வதற்கு எங்கள் வீட்டிற்கு உள்ளோ அல்லது காம்பவுண்டுக்கு உள்ளோ வரமலும் வேறு வழியாக செல்ல முடியும் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து செல்லபுரி அம்மன் கோவில் சுமார் 3/4 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். ரோடு வழியாக தான் அந்த கோவிலுக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் இல்லை, எங்கள் நிலத்தில் வைத்து போட்டேன். எந்த நிலைய அதிகாரி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்று எனக்கு தெரியாத

என்றால் சரிதான். அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

P REVATHY Digitally signed by P REVATHY